

Long-Term Care Home Update | *Community Newsletter* | Lakeridge Health

**மார்ச் 2022**

## கணிசமானளவு செயல்நிறைவேற்றுகை அடையப்பட்டது


மார்ச் மாதம் 2 ஆம் திகதி, லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸ் கணிசமானளவு செயல்நிறைவேற்றத்தை அடைந்தது. ஒரு பிரதான நிறைவேற்றமாகவுள்ள இக்கணிசமானளவு செயல்நிறைவேற்றமானது, முக்கியமான எல்லா நிர்மாணப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டு, தொழிற்படுத்துவதற்கென இல்லத்தின் சாவிகள் லேக்ரிட்ஜ் ஹெல்த் தரப்பினரிடம் கையளிக்கப்பட்டமையைக் குறிக்கின்றது . இம்மாதம் இல்லத்தின் முறையான அங்குரார்ப்பணம் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், லேக்ரிட்ஜ் ஹெல்த், அதன் இறுதித் திட்டமிடலையும் குடியிருப்பாளர்கள் குடியேறுவதற்கான தயார்படுத்தல்களையும் தொடர்ச்சியாக முன்னெடுக்கும்.

இந்த மைற்கல்லையும் இல்லத்தின் மகோன்னதமான முன்னேற்றத்தையும் குறிக்கும் வகையில், PCL Construction சிறியதொரு ஆவணப்படத்தைத் தயாரித்துள்ளது. ஆரம்பம் முதல் இறுதி வரை இல்லத்தை நிர்மாணிப்பதற்கான திட்டமிடல், புத்தாக்கங்கள் மற்றும் பங்காண்மைகள் என்பவற்றை இக்காணொளி காண்பிக்கின்றது.

**காணொளியைப் பார்வையிடுவதற்கும் பகிர்வதற்கும் கீழுள்ள படத்தைச் சொடுக்கவும்!**

## லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸ் பற்றி இலக்கங்களில்:

- வியக்க வைக்கும் வகையில் 13 மாதங்களில் பாரிய நிர்மாணம் பூர்த்தியானது. ஒரு பொதுவான நீண்டகால பராமரிப்புக் கட்டிடத்துக்கு பல மாதங்கள் செல்லும். அவ்வாறின்றேல் பல ஆண்டுகளோ, அதற்கும் அதிகமாகவோ செல்லும்.
- லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸ் இல்லங்கள் முழுவதும் 500 இற்கு மேற்பட்ட ஜன்னல்களும், 1,000 இற்கு மேற்பட்ட கதவுகளும் பொருத்தப்பட்டுள்ளன.
- அதன் உச்சக்கட்டமாக, லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸ் அதனது வேலைத்தளத்தில் நாளொன்றுக்கு 600 இற்கும் மேற்பட்ட தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களைக் கண்டிருந்தது.



## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**குடியிருப்பாளர்கள் எப்போது குடியேறுவார்கள்?**
குடியிருப்பாளர்கள் 2022 மார்ச் 29 செவ்வாய்க்கிழமை முதல் குடியேறத் தொடங்குவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**நான் லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸ் பகுதியைச் சுற்றிப்பார்க்க முடியுமா?**
தற்போது நடைமுறையிலுள்ள கொவிட்-19 நடப்பொழுங்குகள் காரணமாக நீங்கள் நேரில் வந்து சுற்றிப்பார்ப்பதற்கு இடமளிக்க எங்களால் முடியவில்லை. எவ்வாறாயினும், புதிய இல்லங்கள்தோறும் குடும்பங்களையும் சமூக உறுப்பினர்களையும் இணையவழி ஊடாகச் சந்திப்பதற்கான காணொளி சுற்றுப்பயணம் ஒன்றை நாம் மிக விரைவில் ஏற்பாடு செய்வோம்.

**வருகின்றவர்கள் வாகனங்களை எங்கு நிறுத்த முடியும்?**
நீண்டகால பராமரிப்புக்காக வருகின்றவர்களுக்கென லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸின் முன்புறத்தில் குறித்தொதுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான வாகனத் தரிப்பிட வசதிகள் உள்ளன. இல்லத்தை அண்மித்து வாகனத் தரிப்பிடக் கொட்டில் ஒன்றையும் நாம் நிர்மாணித்து வருகின்றோம். அது லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸ் மற்றும் லேக்ரிட்ஜ் ஹெல்த்ஸ் அஜாக்ஸ் பிக்கரிங் மருத்துவமனை என்பவற்றின் சேவையை நாடுவோருக்குப் பயனளிக்கும்.

**லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸில் எத்தனை குழு உறுப்பினர்கள் பணியாற்றுவர்?**
லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸில் 500 இற்கு மேற்பட்ட பராமரிப்பு மற்றும் நிருவாகப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் அனைவரும் நன்கு பயிற்றப்பட்டவர்களும், நீண்டகால பராமரிப்புத் தொடர்பில் பலவருட அனுபவத்தைக் கொண்டவர்களுமாவர்.



*தற்போது நிர்மாணிக்கப்படும் 500 வாகனங்களுக்கான தரிப்பிடக் கொட்டிலின் வான்வழி புகைப்படம், 2022 பெப்ரவரி 6 இல் எடுக்கப்பட்டது.*

**வரையறுக்கப்பட்ட வாகனத் தரிப்பிடம் உள்ளபோது குழு உறுப்பினர்கள் வாகனங்களை எங்கு நிறுத்துவர்?**
கடந்த வசந்த காலத்தில், உள்ளூர்வாசிகளுக்குச் சொந்தமான நீண்டகால குடும்ப வணிகங்கள் லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸில் வாகனங்களை நிறுத்துவதற்கு உதவுவதற்காக பார் வீதி மற்றும் மொனார்க் அவென்யூ ஆகிய பகுதிகளில் காணிகளைத் தாராளமாக அன்பளிப்புச் செய்தன. வாகனத் தரிப்பிடக் கொட்டிலின் பணிகள் முடிவடையும் வரை, நாம் தொடர்ந்தும் அக்காணிகளை அணுகுவோம். அத்துடன் இல்லத்திற்கும் வாகனத் தரிப்பிடப் பகுதிக்கும் இடையே பணியாளர்கள் சென்று வருவார்கள்.

**குடியிருப்பாளர்கள் இல்லத்தில் எவ்வாறு சேர்க்கப்படுகின்றனர்?**
டர்ஹாம் பிராந்தியத்தில் நீண்டகால பராமரிப்பு இல்லத்திற்கான ஆட்சேர்ப்பானது Home and Community Care Support Services Central East இனால் முகாமை செய்து ஒருங்கிணைக்கப்படுகின்றது. மருத்துவ வரலாறு பற்றிய துல்லியமான பதிவேடொன்று இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும், நீண்டகாலப் பராமரிப்புக்கான தகைமையைத் தீர்மானிப்பதற்கு உதவுவதற்குமென பராமரிப்பு ஒருங்கிணைப்பாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு உட்பட, பல பகுதிகளைக் கொண்ட மதிப்பீடொன்றை ஆட்சேர்ப்புச் செயன்முறை உள்ளடக்குகின்றது.

**பார்வையிட வருவோருக்கான விதிகள் எவை?**
பார்வையிட வருவோர் கொவிட்-19 பெருந்தொற்றுக்கு எதிரான தடுப்பூசி ஏற்றியிருப்பதை நிரூபிக்கும் ஆதாரத்தைக் காண்பிக்க வேண்டுமென லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸ் தேவைப்படுத்துகின்றது. அத்துடன் அவர்கள் இல்லத்திற்குள் நுழைய முன்னர் துரித அன்டிஜன் பரிசோதனை ஒன்றைச் செய்ய வேண்டும் எனவும் தேவைப்படுத்தப்படுகின்றனர். தேவையான பொது சுகாதார நடவடிக்கைகளை பணியாளர்கள், பராமரிப்பாளர்கள், வருகைதருவோர் மற்றும் குடியிருப்பாளர்கள் அனைவரும் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். நுழைவாயிலில் ஸ்கிரீனிங் மற்றும் பரிசோதனை என்பவற்றுக்கு உட்படுதல், முகக்கவசம் அணிதல், உடல்சார் இடைவெளியைப் பேணுதல், கைகளை சுத்திகரித்தல் மற்றும் நோயுற்றுள்ள போது இல்லத்திலேயே தங்கியிருத்தல் என்பன அத்தகைய பொது சுகாதார நடவடிக்கைகளுள் முக்கியமானவை ஆகும்.




*லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸின் முன் நுழைவாயிலின் தோற்றம்*

**லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸின் புதிய தொலைபேசி இலக்கமும் மின்னஞ்சலும்**
இல்லம் திறக்கப்படுவதற்குத் தயார்நிலையில் இருப்பதனால், லேக்ரிட்ஜ் கார்ட்ன்ஸை தொடர்புகொள்வதற்கான தகவல்கள் மாற்றப்பட்டுள்ளன. இல்லம் பற்றிய கேள்விகள் இருப்பின், எமது புதிய தொலைபேசி இலக்கமான **905-428-5201 ext. 17110** எனும் இலக்கத்தை அல்லது **LakeridgeGardens-info@lh.ca** எனும் மின்னஞ்சல் முகவரியை எந்த நேரத்திலும் தொடர்புகொள்ளுங்கள்.